1990 ஏப்ரல் 2]

(அ) விவசாய மின் மோட்டார் தொடர்பான மின் துண்டிப்புக் கட்டணம் அண்மையில் உயர்த்தப் பட்டதைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு குறைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரி செய்தல்

*3251 திரு. ஆ. பாலையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் மின் அழுத்தக் குறைவை சீர் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(9.25 மணி)

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல் இடங்களிலும் மின்னழுத்தம் மிகக் குறைவாகவே இருக்கிறது. மின் விளக்கு களெல்லாம் வெளிச்சம் தருவதற்குப் பதிலாக அலங்காரப் பொருட்களாகவே காட்சி அளிக்கின்றன. குறிப்பாக என்னு டைய தொகுதியிலே கப்பியறை, மேல்பாறை, ஈத்தவிளை போன்ற பகுதிகளில்கூட நீண்டகாலமாக இந்த நிலை இருக்கிறது. அங்கெல்லாம் டிரான்ஸ்பார்மார்களை மாற்றுவதற்குப் பொருட்கள் இல்லை, எனவே மாற்றுவதில் காலதாமதப்படுகிறது என்று மின் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, அதற்குத் தேவையான பொருட்களை உடனடியாக வழங்கி அங்கு மின்னழுத்தத்தை அதிகப்படுத்தி, அங்கே அலங்காரப் பொருட் களாக இருக்கின்ற விளக்குகளை எரிய வைப்பதற்கு, வெளிச்சம் தருவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்னழுத்தம் குறைவாக இருப்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. எனவேதான் அதை நிவர்த்தி செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று

சொன்னேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இரண்டு வகைகளிலே மின்சாரம் கிடைக்கிறது. ஒன்று, கோதையாறு மின் திட்டத்திலேயிருந்து 1, மற்றும் 2—லேயிருந்து கிடைக்கிறது. இரண்டாவது, தூத்துக்குடியிலேயிருந்து ஆறுமுகனேரி, சாத்தாங்குளம், பனங்குடி வழியாக உங்களுக்கு மின்சாரம் வந்து சேருகிறது. கோதையாறிலேயிருந்து மின்சாரம் வருகிற நேரத்தில் இந்த மின்னழுத்தம் எற்படுவது இல்லை. ஏனென்றால் அருகிலே இருக்கிறது. ஆனால் தூத்துக்குடிலேயிருந்து ஆறுமுகநேரி, சாத்தாங்குளம், பனங்குடி வழியாக வருகிற பொழுது சில நேரங்களில் மின்ளழுத்தம் ஏற்படுகிறது—லோ வோல்டேஜ் வருகிறது. என்ன காரணம் என்றால், 230 கே.வி.லேயிருந்து 130 கே,வி. வழியாக லைன்கவிலே அது வருகிறது. எனவே, அவற்றை உடனடியாக, நிவர்த்தி செய்ய இரண்டாவது 110 கே.வி. லைன் தூத்துகுடியிலேயிருந்து குறைந்தது சாத்தான்குளம் வரையிலே அமைக்க வேண்டுமென்பதற்காக முயற்சியெடுத்து, முதல் கட்டமாகத் தூத்துக்குடியிலேயிருந்து அறுமுகநேரி வரையிலே அந்த லைன் போடப்பட்டிருக்கிறது. ஆறுமுகநேரியிலேயிருந்து சாத்தாங்குளம் வரை போடுவதற்கு நிதிநிலை காரணமாகச் சற்று தொய்வு வந்திருக்கிறது. இது முதல் கட்டம் இது முதல் படி, எடுத்திருக்கிற நடவடிக்கை. இரண்டாவதாக, ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், தக்கலை குழித்துறை, பேச்சிப்பாறை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தான்-ஐந்து இடங்களிலே சப் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. எனவே, இந்த லோ வோல்டேஜைப் போக்குவதற்காக மேலும் முப்பநந்தல், சேரன்மங்கலம், அழகியபாண்டியபுரம், வல்லன் குமாரன்விளை, முஞ்சிறை, வீரனூர் ஆகிய இடங்களில் ஆறு சப் ஸ்டேஷன்கள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதில் ஏற்கனவே முப்பநந்தலிலே 110 கே.வி. சப்ஸ்டேஷன் அமைக்கப்பட்டு 7.3.1990 முதல் அது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இஃதன்னியில், மேலும் இத்தகைய நிலைமைகள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்வதற்காக அறிக்கை ஒன்று பெறப்பட்டு அது மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நமக்கு ஒப்புதல் கிடைத்தால் 839 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு திட்டங்களை அமைக்க அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறது. இதற்கிடையில் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய எஸ்.இ. அவர்கள் ரூ20.65 லட்சம் செலவில் Additional Distribution Transformers and new L.T. Line அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இவற்றைவெல்லாம் நீண்ட காலத் திட்டம், குறுகிய காலத் திட்டம், உடனடித் திட்டம்-மூன்று திட்டங்களை எடுத்துக் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் லோ வேல்டேஜ் இல்லாமல் பார்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

1990 ஏப்ரல் 2]

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மின்னழுத்தக் குறைவு என்பது கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்லாமல், எங்கள் மாவட்டமான வடார்க்காடு —அம்பேத்கார் மாவட்டத்திலும், குறிப்பாக காட்பாடி வட்டாரத்திலே மின்னழுத்தக் குறைவின் காரணமாகக் குடி தண்ணீர் சில நேரங்களில் கிடைக்காமல் இருக்கிறது. அவற்றைப் போக்குவதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(9.30 மணி)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய குறைகள் வந்தால், அரசு அதுபற்றி நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைவு காரணமாக, டிரான்ஸ்பார்மர் பழுதுபட்டிருப்பது என்பது, பல மாவட்டங்களிலேயும், பல இடங்களிலேயும் இருக்கின்றது, புதிய டிரான்ஸ்பார்மர்களைப் பொருத்துவது, பொருத்தப்பட்ட டிரான்ஸ்பார்மர்களை பழுது பார்ப்பது, பராமரிப்பது ஆகிய இனங்களுக்காக, மின் வாரியம் போதுமான நிதியை ஒதுக்காத காரணத்தினாலேதான், இக்குறை பாடுகள் நடக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்காக, போதுமான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இவற்றைப் போக்குவதற்கு நிதி ஒதுக்கி இருக்கிறோம். ஆனாலும். மின் வாரியம் மிகப்பெரிய இழப்பில் இருப்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள் அந்த இழப்பைச் சிறிதேனும் சரிக்கட்ட வேண்டும் என்பதற் காகத்தான், சமீபத்திலே மின்கட்டனத் தொகைகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இவற்றை நிரந்தர மாகச் சரிபார்த்து, புதுப்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான், பல்வேறு திட்டங்களை வாரியம் வகுத்துக் கொண்டிருக்கிறது.

செம்பனார்கோவில்-தரங்கம்பாடி பாதையை அகலப்படுத்துதல்.

*3769 திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

மயிலாடுதுறையிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் நெடுஞ் சாலையின் பகுதியான செம்பனார் கோவிலில் இருந்து தரங்கம் பாடி வரையிலும் செல்லும் குறுகிய பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?